**திரு. அக்பர் கவுஸர் அவர்கள் ஸ்தல விருட் சங்கள் பற்றியும், அதன் மருத்துவ குணங்கள் பற்றியும் மிக விரிவாக தெளிவாக எழுதியிருக் கிறார் என்பது மட்டு மல்ல, தமிழ் இலக்கியங் களில் அதே மரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடல்களையும் அதன் சிறப்புகளையும் ஒருங்கே எடுத்து குறிப் பிட்டிருப்பது பாராட் டிற்குரியது. பல அரிய தகவல்கள் அதில் இடம் பெற்றிருக்கின்றன.**

இந்து சமுதாயம் மிகப் பழமையான கலாச்சாரம் கொண்டது. இதன் தத்துவங்கள் மிகவும் பழமையானது. இஸ்லாம் மதத்தில் இறைவனை மட்டுமே வணங்குகிறார்கள். இறைவனின் படைப்புகள் வணங்கப்படு வதில்லை. மாறாக இந்து சமுதாய மக்கள் இறைவனையும் வணங்கு கிறார்கள். இறைவனின் படைப்பு களையும் வணங்குகிறார்கள். மனிதனுக்கு நன்மை தருவன வற்றிற்கு நன்றி செலுத்துகிறார்கள் என்ற கருத்தை ஆழமாக வலியுறுத்துகிறார்.

நவதானியங்கள் இந்த உடலிற்கு வலிமை சேர்ப்பவை, அதனால்தான் ஒன்பது கிரகங் களுக்கு ஒரு தானியமாக ஒன்பது தானியங்களை நிவேதனம் செய்து வழிபட்டார்கள் என்று சொல்லி, ஒவ்வொரு தானியத்திற்கும் உள்ள மருத்துவ குணங்களை மிக விரிவாக, தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். அதுமட்டு மல்ல, பல அரிய தகவல்களையும் கொடுக்கிறார். உதாரணத்திற்கு, நெல்லைப்பற்றிச் சொல்லும்போது உலகில் 156 மில்லியன் டன்னும், இந்தியாவில் மட்டும் 54 மில்லியன் டன்னும், தமிழகத்தில் மட்டும் 6.2 மில்லியன் டன்னும் நெல் விளை விக்கப்படுகிறது. தமிழக நிலப்பரப் பில் 36 சதவீதம் நெல் மட்டுமே பயிராகிறது என்பன போன்ற அரிய தகவல்களையும் தருவது படிப் பவர்களுக்கு சுவை கூட்டுகிறது. அது மட்டுமல்ல, நவக்கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மரமும் உண்டு என்பதையும், அந்தந்த நவக்கிரக கோவிலுக்கே சென்று அங்கு ஸ்தல விருட்சமாக இருக்கும் மரங்களைப்பற்றி படங்களோடு விரிவாக எடுத்துக் கூறுகிறார். சூரியகிரகத்திற்கு வெள்ளை எருக்கன், சந்திரனுக்கு முருக்கன், அங்காரகனுக்கு கருங்காலி, புதனுக்கு நாயுருவி, குருவிற்கு அரச மரம், சுக்கிரனுக்கு அத்தி மரம், சனி பகவானுக்கு வன்னி மரம், ராகுவிற்கு அறுகு, கேதுவிற்கு தர்ப்பை என்றும் இருந்து வருவதைக் குறிப்பிட்டு அதன் மருத்துவ குணங்களை விரிவாக விளக்குவது மட்டுமல்ல, இலக்கியங்களில் இருந்தும் சான்று காட்டுகிறார்.

உதார்ணத்திற்கு, வன்னிமரத் தைப்பற்றி பேசும் போது, வன்னி மரம் ரிக்வேதம், மகாபாரதம் மற்றும் ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிற தென்றும் – ராமபிரான் ராவணனு டன் போரிட புறப்படுவதற்கு முன் வன்னி மரத்தைத் தொட்டு வணங்கிய பின் போர் புரியச் சென்றார் என்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தியும், பாண்டவர்கள் தங்கள் போர் ஆயுதங்களை வன்னி மரத்தடியில் புதைத்து மறைத்து வைத்திருந்த செய்தியும் உள்ளது. அதேபோல் திருக்குரானும் வன்னி மரத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்கிறது.

எப்படி வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின் றனவோ, அதேபோல் விஞ்ஞான தகவல்களும் அழகாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. உதாரணத் திற்கு, நான் மரங்களுள் அரசமர மாக இருக்கிறேன் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ண கீதையில் குறிப்பிட்டு உள்ளார். அரச மரமும், வேம்பும் ஒன்றாக இணைந்து வளரும் இடத்தில் உயிரியல் மின்சக்தி நிலவுவதாக அறிவியல் கூறுகிறது. ஆதலால், இந்த மரங்களை வலம் வரும்போது உடலில் இருக்கும் சுரப்பிகள் தூண்டப்படுகிறது. அதனால்தான் குழந்தைப் பாக்கியம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, இது மூட நம்பிக்கையின் விஞ்ஞான கூறுகள். அதனால்தான் ஒரு புதுக் கவிஞர் பாடினார்.

*“குழந்தை வேண்டுமென்று – மக்கள்*
*அரசைச் சுற்றியது அந்தக்காலம்*
*வேண்டாம் என்று – அரசு*
*மக்களைச் சுற்றி வருவது*
*இந்தக்காலம்” – என்று...*

இவை மட்டுமல்ல பல அரிய கருத்துக்கள் அரிய மரங்களைப் பற்றி மட்டுமல்ல நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கும் மரங்க ளான தென்னை, பனை, முருங்கை, மா, பலா, வாழை போன்றவை பற்றியும் பல கருத்துக்கள் எடுத்துக்கூறப் பட்டுள்ளது சிறப்பு.

இப்படி எவ்வளவு வேண்டு மென்றாலும் எழுதிக்கொண்டே போகலாம். இந்த அரிய முயற் சிக்கு திரு அக்பர் கவுஸர் அவர் களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இந்த நூல் ஒவ்வொரு வீட்டிலும் ஆரோக்கியத் தைப் பேணும் ஓர் ஆவணமாகவே பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு நல்ல நூல் என்பதையும் பெருமை யுடன் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்த்துக்கள்
இல. கணேசன்